தலைவி அம்மா அவர்களுடைய அரசு மேற்கொள்ளும் என்பதை இந்த நேரத்திலே தெரிவித்து அமர்கின்றேன்.

முற்பகல் 10-40

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 69, மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. சௌந்தரபாண்டியன், மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள்.*

69—

வட்டாட்சியர் அலுவலகக் கட்டடம்

***730—திரு. அ. சௌந்தரபாண்டியன்:**

மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

லால்குடி தொகுதி, லால்குடி வட்டாட்சியர் அலுவலகத்திற்குப் புதிய கட்டடம் கட்ட அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. ஆர்.பி. உதயகுமார், வருவாய்த் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

இந்தியத் திருநாட்டின் 70-வது சுதந்திர தின விழாவை ஒட்டி, தாய்த் திருநாட்டின் தலைமைச் செயலகக் கோட்டை முகப்பிலே தேசியக் கொடியைத் தன் பொற்கரங்களால் ஏற்றிவைத்து, (மேசையைத் தட்டும் ஒலி) ஏழைகளே இல்லாத தமிழகத்தை உருவாக்கிட சூளுரை ஏற்றிருக்கின்ற மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் சீரிய, நல் வழிகாட்டுதலின்படி, மக்கள் சேவை ஆற்றி வருகின்ற பழம்பெருமை வாய்ந்த வருவாய்த் துறையில், தினந்தோறும், தினந்தோறும் புதுமைகள் பல புகுத்தி, புத்துயிர் அளித்து, புதிய நிருவாகப் புரட்சி நிகழ்த்திக் காட்டப்பட்டு வருகிறது. இன்றைக்கு வருவாய்த் துறைமூலம் செயல்படுத்தி வருகின்ற இணைய வழி பட்டா மாறுதல் திட்டத்திற்காக, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் 'நல் ஆளுமை விருதினை' தனது பொற்கரங்களால் எனக்கு வழங்கி, (மேசையைத் தட்டும் ஒலி) வருவாய்த் துறைக்கு மாபெரும் பெருமை சேர்த்திட்ட, வாழும் மனித தெய்வம், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர், தமிழினம்காத்து நிற்கின்ற தமிழர் குலச் சாமி, மாண்புமிகு அம்மா அவர்களுடைய

பொற்பாதங்களில் கோடானு கோடி நன்றியினை வருவாய்த் துறையின் சார்பிலே காணிக்கையாக்கி, வணங்குகின்றேன்.

திருச்சிராப்பள்ளி மாவட்டம், லால்குடி வட்டாட்சியர் அலுவலகத்திற்குப் புதிய கட்டடம் கட்டுவது தொடர்பான முன்மொழிவுகள் அரசிடம் ஏதுமில்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. சௌந்தரபாண்டியன் அவர்கள்.*

திரு. அ. சௌந்தரபாண்டியன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தியாவில் உள்ள அனைத்து முதல்வர்களும் சுதந்திர தின விழாவில் கொடியேற்றும் உரிமையைப் பெற்றுத் தந்த தானைத் தலைவர் கலைஞர் அவர்களையும், (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு தளபதி அவர்களையும் வணங்குகிறேன்.*

திருச்சிராப்பள்ளி மாவட்டம், லால்குடி வட்டத்தில் இயங்கிவரும் வட்டாட்சியர் அலுவலக வளாகத்தில் 9-க்கும் மேற்பட்ட அலுவலகங்கள் இயங்கி வருகின்றன. அந்த வளாகத்தில் 3 நீதிமன்றங்களும் இயங்கிவருகின்றன. அதனால் இட நெருக்கடியாக உள்ளது. அதோடுமட்டுமல்லாமல், அந்தக் கட்டடமானது பயன்பாட்டிற்குத் தகுதியற்ற கட்டடம் என்று பொதுப் பணித் துறை கட்டடப் பொறியாளர் அவர்களும் சான்றளித்துள்ளார். எனவே, இந்தச் சூழ்நிலையைக் கருதி, புதிய இடத்தில் வருவாய் வட்டாட்சியர் அலுவலகம் கட்டிக் கொடுப்பதற்கு அரசு முன்வருமா என்பதைத் தங்கள்மூலம் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. ஆர்.பி. உதயகுமார்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருச்சிராப்பள்ளி மாவட்டம், லால்குடி வட்டாட்சியர் அலுவலகம் இயங்கிவரும் தற்போதைய கட்டடம் மிகவும் பழமையான கட்டடம் என்பதால், லால்குடி வட்டாட்சியர் அலுவலகத்திற்குப் புதிய கட்டடம் கட்ட உரிய மதிப்பீடு தயார் செய்து பொதுப் பணித் துறைக்குத் தெரிவிக்கப்பட்டுள்ளது. திருச்சிராப்பள்ளி மாவட்ட ஆட்சித் தலைவரிடமிருந்து உத்தேச மதிப்பீட்டு அறிக்கை மற்றும் முன்மொழிவுகள், முதன்மைச்*

செயலாளர், வருவாய் நிருவாக ஆணையாளர் மூலமாக அரசுக்கு வரப்பெற்றவுடன், திருச்சிராப்பள்ளி மாவட்டம், லால்குடி வட்டாட்சியர் அலுவலகத்திற்குப் புதிய அலுவலகம் கட்டுவதற்குத் தேவையான நடவடிக்கைகளை மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அரசு மேற்கொள்ளும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. சௌந்தரபாண்டியன் அவர்கள்.

திரு. அ. சௌந்தரபாண்டியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்பொழுது இயங்கிவருகின்ற வட்டாட்சியர் அலுவலகமானது, திருச்சி-சிதம்பரம் தேசிய நெடுஞ்சாலை 227-லிருந்து 150 அடி தூரத்தில்தான் இயங்கிவருகின்றது. அந்த அலுவலகத்திற்குச் செல்கின்ற பாதையின் இருமருங்கிலும், மேல்புறத்தில் அரசு ஆண்கள் மேல்நிலைப் பள்ளியும், கீழ்ப்புறத்தில் ஊராட்சி ஒன்றியத் தொடக்கப் பள்ளியும் மற்றும் சிறு, சிறு கடைகளும் உள்ளதால், அந்த 10 அடி சாலையில் அலுவலகப் பணிகளுக்கு வருகின்ற பொது மக்கள் தங்கள் இரு சக்கர வாகனங்களை நிறுத்துகின்ற காரணத்தினால், அரசு அலுவலர்கள்கூட அந்த அலுவலகத்திற்குச் செல்வதற்கு இடையூறாக உள்ளது.

அதோடுமட்டுமல்லாமல், இந்த அலுவலகத்தை வேறு இடத்தில் கட்ட வேண்டும் என்பதற்காக, 2009 ஆம் ஆண்டு, இன்றைய திருச்சி மேற்குத் தொகுதியின் சட்டமன்ற உறுப்பினர் அண்ணன் திரு. நேரு அவர்கள், வட்டாட்சியர் அலுவலகம் தற்பொழுது இயங்கிக் கொண்டிருக்கின்ற சிறுதையூர் கிராமத்திற்குட்பட்ட பகுதியிலேயே தன்னுடைய 50 சென்ட் நிலத்தை அன்றைக்கே தானமாக வழங்கி, ஆளுநர் அவர்களுக்காக, திருச்சி மாவட்ட ஆட்சியாளரின் பெயரில் பத்திரப் பதிவு செய்து கொடுத்து, பட்டா மாறுதலும் செய்யப்பட்டுள்ளது. தற்போது இருக்கும் கட்டடம் அரசு அலுவலகப் பயன்பாட்டிற்குத் தகுதியற்ற கட்டடம் என்பதால், மேற்கூறிய புதிய இடத்தில் பொது மக்களும், அரசு அலுவலர்களும் பயன்படக்கூடியவகையில், காலவரையறை நிர்ணயித்து, வருவாய் வட்டாட்சியர் அலுவலகம் கட்டிக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். மேலும், அந்த அலுவலகத்தில் சரிபாதிக்கும் மிகுதியான பணியிடங்கள் தற்போது வெற்றிடமாக உள்ளதால்,

2016 ஆகஸ்ட் 16]

அவற்றையும் இந்த அரசு நிரப்பிட நடவடிக்கை எடுக்குமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள்.

முற்பகல் 10-45

மாண்புமிகு திரு. ஆர்.பி. உதயகுமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொதுவாக மாவட்ட நிருவாகத்திலே வருவாய்த் துறையினுடைய பங்கு மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தது என்பதினாலே, பணிச்சூழலை மேம்படுத்தும்பொருட்டும், பொது மக்கள் எளிதாக அணுகிட உதவும் வகையிலும், வருவாய்த் துறைக்குத் தேவைப்படுகின்ற அலுவலகக் கட்டடங்கள், குடியிருப்புக் கட்டடங்கள் மற்றும் தொடர்புடைய உள் கட்டமைப்பு வசதிகள் என முன்னெப்பொழுதும் இல்லாத அளவிலே, முன்னுரிமை அடிப்படையிலே மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசிலேதான், கடந்த 5 ஆண்டுகளில் 356 கோடியிலே, 377 கட்டடங்களை மாண்புமிகு புரட்சித் தலைவி இதய தெய்வம் அம்மா அவர்கள் (மேசையைத் தட்டும் ஒலி) வருவாய்த் துறைக்காக உருவாக்கித் தந்திருக்கிறார்கள்.

அந்தவகையிலே, திருச்சிராப்பள்ளியிலே திருவெறும்பூர் புதிய வட்டாட்சியர் அலுவலகத்திற்குப் புதிய கட்டடம் கட்டப்பட்டு, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அம்மா அவர்களால் 27-2-2016 அன்று திறந்து வைக்கப்பட்டது. ஸ்ரீரங்கத்திலே, வருவாய்க் கோட்டாட்சியர் அலுவலகம் மற்றும் குடியிருப்புக் கட்டடம் கட்டி முடிக்கப்பட்டு, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களால் 2-6-2016 அன்று திறந்து வைக்கப்பட்டது. திருச்சியிலே, வட்டாட்சியர் குடியிருப்பு கட்டி முடிக்கப்பட்டு, பணிகள் முடியும் நிலையிலே உள்ளன. மருங்காபுரியிலே வட்டாட்சியர் அலுவலகம் மற்றும் வட்டாட்சியர் குடியிருப்பு கட்டுவது தொடர்பாக ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டுள்ளது. திருச்சி மாவட்டத்திலே இரண்டு வருவாய் ஆய்வாளர் அலுவலகங்களின் கட்டடப் பணிகள் நடைபெற்று வருகின்றன. ஆகவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதைப்போல, அந்த இடம் ஏற்ற வகையிலே இல்லை என்று சொன்னால், உரிய இடத்தை மாவட்ட நிருவாகத்தின் மூலமாக ஆய்வு செய்து, புதிய கட்டடம் கட்டுகின்ற அந்த இடம்,

மக்கள் எளிதாக அணுகுகின்ற வகையிலே, அனைவருக்கும் ஏற்ற வகையிலே அமைகின்றபடி, மாவட்ட நிருவாகத்தினுடைய உரிய பரிந்துரையோடு, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய மேலான கவனத்திற்கு மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கையை எடுத்துச் சென்று பரிசீலிக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ரா. தமிழ்ச்செல்வன் அவர்கள்.

திரு. ரா. தமிழ்ச்செல்வன்: மனித நேயமும், மானுடப் பற்றும், ஜீவ கருணையும் நிறைந்திருக்கிற மாட்சிமை பொருந்திய தமிழ்த் திருநாட்டின் முதலமைச்சர் மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மாவினுடைய கருணையால், (மேசையைத் தட்டும் ஒலி) கடாட்சத்தால், பெரம்பலூர் சட்டமன்றத் தொகுதியில் இரண்டாவது முறையாகப் போட்டியிடுகின்ற அரியதோர் உயர்ந்த சந்தர்ப்பத்தை வல்லமையோடு வாரி வழங்கியிருக்கின்ற வான்மேகம் கொண்ட தலைவி, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய பொற்பாதம் பணிந்து வணங்கி, பெரம்பலூர் சட்டமன்றத் தொகுதி வாக்காளர் பெருமக்களுக்கும் என்னுடைய நெஞ்சார்ந்த நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறேன். பெரம்பலூர் மாவட்டம், பெரம்பலூர் சட்டமன்றத் தொகுதியில், மாவட்டத் தலைநகரில் அமைந்திருக்கிற வருவாய் வட்டாட்சியர் அலுவலகம் 75 ஆண்டுகளுக்கு மேலான பழமையான கட்டடத்தில் இயங்கி வருகிறது. பழுதுபட்டு இருக்கிற அந்த வருவாய் வட்டாட்சியர் அலுவலகத்தை இடித்துத் தள்ளிவிட்டு, புதிய வருவாய் வட்டாட்சியர் அலுவலகக் கட்டடத்தைக் கட்டித்தர மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதனை தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. ஆர்.பி. உதயகுமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொதுவாக புதியதாக உருவாக்கப்பட்டு இருக்கிற வட்டங்களுக்குத் தேவையான புதிய கட்டடங்களும், பழமையான கட்டடங்கள் பயன்பாட்டிற்கு ஏற்ற வகையில் இல்லை என்று

2016 ஆகஸ்ட் 16]

சொன்னால், அவற்றையும் ஆய்வு செய்து, அவற்றிற்குத் தேவையான புதிய கட்டடங்களையும் மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், தேவையான நேரத்திலே உருவாக்கித் தந்து கொண்டிருக்கின்றார்கள்.

அதைப்போல, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய பெரம்பலூர் மாவட்டத்தில், வேங்கலம் புதிய வட்டாட்சியர் அலுவலகம் மற்றும் குடியிருப்பு 2-6-2015 அன்று மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அம்மா அவர்களால் திறந்து வைக்கப்பட்டது. ஆலந்தூர் புதிய வட்டாட்சியர் அலுவலகம் மற்றும் குடியிருப்பு 2-6-2015 அன்று மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அம்மா அவர்களால் திறந்து வைக்கப்பட்டது. பெரம்பலூரிலே ஒரு வருவாய் ஆய்வாளர் அலுவலகம் கட்ட இடம் தேர்வு செய்யப்பட்டு, பணி நடைபெற்று வருகிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அந்த பழைய கட்டடத்தை இடித்துத் தள்ளிவிட்டு, புதிய கட்டடம் வேண்டும் என்று சொல்லியிருக்கின்றார்கள். அந்தக் கட்டடம் இடித்துத் தள்ள வேண்டிய நிலையில் இருக்குமானால், மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய மேலான கவனத்திற்கு எடுத்துச் சென்று, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கை பரிசிலனை செய்யப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திருமதி பெ. சீத்தாபதி அவர்கள்.

திருமதி பெ. சீத்தாபதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மூவேந்தர் மடி வளர்ந்த முச்சங்கத் தமிழாம் தலைவர் கலைஞர் அவர்களையும், அண்ணன் தளபதியார் அவர்களையும் வணங்கி, என் வினாவைத் தொடுக்கின்றேன்.

திண்டிவனம் தொகுதி, திண்டிவனம் நகராட்சியில் உள்ள வட்டாட்சியர் அலுவலகம் மிகவும் பழமையானது அங்கு அடிப்படை வசதிகள் போதிய அளவு இல்லாததாலும், பெண் ஊழியர்கள் அதிகமாக பணி செய்வதாலும், நெரிசலான கடைவீதி பகுதியில் அது அமைந்திருப்பதாலும், மக்கள் வந்து செல்வதற்கு மிகவும் சிரமமான நிலையில் உள்ளதாலும், திண்டிவனம் தொகுதிக்குட்பட்ட திண்டிவனம் நகராட்சியில், வருவாய் வட்டாட்சியர் அலுவலகம் கட்டித் தர வேண்டுமாய்

தங்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் கேட்டுக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள்.

முற்பகல் 10-50

மாண்புமிகு திரு. ஆர்.பி. உதயகுமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சார்ந்திருக்கின்ற விழுப்புரம் மாவட்டத்திலே, சின்ன சேலம் வட்டாட்சியர் அலுவலகம் மற்றும் குடியிருப்பு கட்டி முடிக்கப்பட்டு, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களால் 2-6-2015 அன்று திறந்து வைக்கப்பட்டது. அதேபோல, விழுப்புரம் மாவட்டத்திலே 241 கிராம நிருவாக அலுவலகங்களைப் புனரமைக்க ஆணை வெளியிடப்பட்டு, 202 கிராம நிருவாக அலுவலகங்கள் புனரமைக்கப்பட்டுள்ளன. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்வதுபோன்ற ஒரு நிலை அங்கேயிருக்குமானால், மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கையை, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய மேலான கவனத்திற்கு எடுத்துச் சென்று, ஆய்வு செய்து, பரிசீலிக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 70, மாண்புமிகு உறுப்பினர் திரு. சோ. மாரியப்பன் கென்னடி, மாண்புமிகு பள்ளிக் கல்வி மற்றும் விளையாட்டு மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

70—

கூடுதல் கட்டடம்

***1603—திரு. சோ. மாரியப்பன் கென்னடி:**

மாண்புமிகு பள்ளிக் கல்வி மற்றும் விளையாட்டு மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—